

அமரர்
# கமலாதேவி மகாலிங்கம்
அவர்களின் சிவபதப்பேறு குறித்த
நினைவுடன் மலரும்
# — கமல மலர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



உலகில்

23.10.1945

உதிர்வில்

24.02.2011

அமரர்

# திருமதி மகாலிங்கம் கமலாதேவி

அவர்களின்

திதிவெண்பா

ஆண்டு விகிர்தியதில் அமைந்திடு மாசி அமரபக்க ஸப்தமியில்
வேண்டாம் இவ்வுலக வாழ்வென வெறுத்தே
பூண்டபுகழ் புண்ணியவதி கமலாதேவி நங்கை
ஆண்டருளும் ஆண்டவனடி சேர்ந்தனளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தென்மராட்சி - மீசாலை கிழக்கு - மீசாலையை
பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

# திருமதி கமலாதேவி மகாலிங்கம்

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த நினைவுடன் மலரும்

# கமல மலர்

26-03-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



என்னவளாம் என்னுயிராய் என்றும் வாழும்

என் கண்மணியாம் கமலாவிற்கு சமர்ப்பணம்

பெண்ணவளாம் பெரும் மக்கள் சேவகியாம்

பெருமையுடன் வாழ்ந்த என்

அணங்கிற்கு சமர்ப்பணம்

அன்னையாய் அவனியில் அனைவரையும்

ஆதரிப்பவளாய் வாழ்ந்த

அன்பு உத்தமியாள் கமலாவிற்கு சமர்ப்பணம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து

வாழ்பவர்க்கு துணையாய் நின்று

வானகத்துறைந்த தாரகைக்கு சமர்ப்பணம்.

மீசாலை கிழக்கு
**மீசாலை**



**- கணவன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

## தேவாரம்

பேயடையாபிரி வெய்தும் பிள்ளையினோடுள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவார் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயன தோளுமை பங்கன் வெண்காட்டு முக்குளநீர்
நோய் வினையார் அவர் தம்மை நோயாவாம் தீவினையே

## திருவாசகம்

காலம் உண்டாகவே காதல் செய்து உம்மின் கருதரிய
ஞாலம் உண்டானொடு நான் முகன் வானவர் நண்ணிலே
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப் பிரான் தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே...

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க் கரசை
என் உயிர்க்கமுதினை எதிரில்
போக நாயகனை புயல்வணற்கு அருளிய
பொன் நெடும் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிக திரு வீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
போக நாயகனை யன்றி மற்றொன்றும் உண்டென
உணர்கிலேன் யானே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட் செயின் குழாம் புகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டங் கடந்த பொருளளவு இல்லாதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

ஆதியாய் நடுவுமாய் அளவிலா அளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகி
பேதியா வேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புலி அதன் ஆடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாவையும் முடி மீதே
அணிந்த ஈசன் பரிவுடன் குமவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் உயிர் கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சிறக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

## அறுகம்புலவு விநாயகனை வேண்டிப் பரவியவை

நீறிட்டு நெஞ்சில் நினை வைத்து நாளும் வணங்கியவள்
வேறுற்றிட மனங் கொண்டவள் உன்னரும் நற்பதமாம்
பேறுற்று மாறிலா இன்புற எண்ணினற் ஏற்றருள்வாய் கமலாவை
வீறுற்று வீற்றிருக்கும் அறுகம் புலத்தவனே ஐங்கரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை உளங் கொண்ட கமலாதேவியின் வாழ்வியலில் சில துளிகள்

காராளர் தொட்டு கல்வி அறிவாளர் வரை பலர் வாழும் தென்மராட்சிப் பதியதனில் தென்னையொடு பலாவும் தேன் சிந்தும் மாவும் சூழும் சூழலாம் மீசாலை கிழக்கில் தந்தை ஆறுமுகம் தான் நோக்க அன்னையவள் கனகம்மாவின் மணி வயிற்றினிலே மூத்த புதல்வியராய் ஆண்டு 1945 ஐப்பசித் திங்கள் 23-ம் நாள் (45.10.23) உதித்தனள். "கூட்டெண் 5 இல் குவலயத்தில் உதித்தவள் குடிசிறக்க வைப்பாள்" எனும் வாக்கிற்கிணங்க குணக்குன்றாய் உதித்த கமலாதேவியின் பின்னே சரஸ்வதி, கமலாம்பிகை, நடராசபிள்ளை, துரைசிங்கம், மங்களேஸ்வரி, வடிவாம்பாள், இராசாம்பாள், கமலேஸ்வரி, நளாயினி, மாலினி, நந்தினி ஆகியோர் சக உதரங்களாய் (சகோதரராய்) வந்துதித்தனர்.

"நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்" என்பதற் கமைய அன்னையும் தந்தையும் அருகிருக்க அக்கா கமலாவின் வழிகாட்டலில் அனைவரும் ஒன்று கூடி வாழ்ந்தனர்.

மழலைப் பருவம் தொட்டு மலரும் யௌவனப் பருவம் வரை தென்மராட்சியில் புகழ்பூத்து விளங்கும் பாடசாலைகளில் ஒன்றாகிய யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் தன் கல்வியை தொடர்ந்து 1962 ஆம் ஆண்டு க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்து தான் கற்ற கல்லூரிக்கு பெருமை சேர்த்து நின்றார். 'வாழக்கல்' என்ற வாக்கிற்கிணங்க 1964 - 1965 ஆம் ஆண்டுகளில் பால பண்டிதை வகுப்பிற்கு சென்று அப்பரீட்சையிலும் சித்தியடைந்தார். தான் கற்றதோடு மட்டும் நில்லாமல் தன் சகோதரர்கள் கல்வியிலும் கவனங் கொண்டு செயலாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கேந்திய மாதாம் புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையார் காட்டிய வழிநின்று சமூக சேவை செய்ய விரும்பிய பெண்ணவள் கமலா ஆண்டு 1968 இலே தாதிய சேவையில் இணைந்து கொண்டார்.

சம்மாந்துறை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய இடங்களில் அமைந்திட்ட வைத்தியசாலைகளில் தாதி யராய் கடமையாற்றிய பெண்ணில் பெருந்தகை அன்னை கமலா இனிமையான பேச்சு, என்றும் மாறாத புன்னகை, இவற்றால் நோயாளிகளின் மனங்களிலும் இடம் பிடித்துக் கொண்டார். அதுமட்டுமல்ல சேவையாற்றிய இடங்களிலெல்லாம் பணிவு, செயற்றிறன், சீரிய கடமை ஆகியவற்றால் வைத்தியர்கள் மனங்களில் மட்டுமல்ல வைத்தியசாலை ஊழியர்களின் மனங்களிலும் நிறைந்து நின்றார். கடமையில் பெருமை கண்ட கன்னி கமலா கலியாணம் காண 1979 ஆவணித் திங்கள் காலங்கூடிற்று. அல்லாரையம்பதி வாழ் நாகநாதி சின்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனாம் மகாலிங்கம் (இ.போ.ச.நடத்துனர்) அவர்களை மங்கல வாத்தியம் முழுங்க மனை சிறந்தோர், நிறைந்தோர் வாழ்த்த கரம் பிடித்து களிப்புற இல்வாழ்வினை தொடர்ந்தனள் கமலாதேவி.

கண் அவனாம் கணவனின் மனங் கோணாது கடமைகளை இனிதுறவே செய்த கமலா பொதுச் சேவைகள் செய்யவும் பின்னிற்கவில்லை. ஆண்டு 1991 மருந்துகள் ஒவ்வாமை காரணமாக தனது 46 வது வயதிலே சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். ஆயினும் தன் வீடு தேடி வரும் நோயாளர்களுக்கு ஆலோசனை வழங்கி அவர்களின் வழிகாட்டியாய் நிற்பதிலும் வல்லவராய் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற பெருவாக்கிற் கிணங்க அன்றிலும் பேடும் போல என்றும் பிரியாதிருந்த கமலாதேவி கணவனுடன் இணைந்து ஊரில் நடைபெறும் நற்காரியங்கள் யாவற்றிலும் முன்னின்று செயற்படுவார்.

தம் சகோதரர் குடும்பங்களுக்கும் தக்க ஆலோசனை வழங்கி அவர்களின் குழந்தையின் ஒவ்வொரு உயர்ச்சிப் படி நிலைக்கும் உதவிக் கரங் கொடுத்தார். அயலவர் மனங்களிலும் உறவினர் உள்ளங்களிலும் குடி கொண்ட கமலா அவர்கள் தேவை அறிந்து உதவி புரிவார்.

எங்கள் அன்னை கமலா தம் வாழ்நாளில் சமூகப் பணியோடு மட்டும் நில்லாது சமயப் பணி செய்வதிலும் மேம்பட்டு நின்றார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற சரியை வழிநின்ற நாவுக்கரசு நாயனாரின் கூற்றுக்கிணங்க அல்லாரை அமைந்திடு அறுகம்புலவுப் பிள்ளையார் ஆலயத்தில் சுற்றுப் பிரகார ஆலயமாகச் சண்டேஸ்வர சுவாமிகளுக்கு தனது சொந்தச் செலவிலேயே ஆலயமமைத்துக் கொடுத்து 2009-ம் ஆண்டில் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற முன்னின்று உழைத்தார். அத்தோடு மட்டும் நில்லாது திருமணம் செய்த காலந்தொட்டு கணவனுடன் இணைந்து தேர்த் திருவிழா உபயத்தை சிறப்புறச் செய்தார். வெள்ளி என்றால் வெவ்வினை களை வேரறுக்கும் வேளமுகத்தவனாம் அறுகம் புலவுப் பிள்ளையார் ஆலயம் சென்று பாடிப் பரவி வழிபாடு செய்வார்.

பிறந்ததன் பயன் பெறப் பிறவிப் பிணி அறுக்க தலங்கள் நிறைந்திடு தென்னிந்தியாவிற்கு 2003 ஆம் ஆண்டு கணவனுடன் இணைந்து சென்று அனைத்து ஆலயங்களுக்கும் சென்று இறை வழிபாடு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித எதிர்பார்ப்புமின்றி தன் கணவனுடன் இணைந்து பல சுபகாரியங்களை உறவினர் வீடுகளிலும் உற்றவர் வீடுகளிலும் முன்னின்று செய்து அனைவர் உள்ளங்களையும் கொள்ளை கொண்ட எங்கள் கமலா 24.02.2011 அன்று கண்ணிறைந்த கணவன் கண்கலங்க, கூடிப் பிறந்த சகோதரர்கள் கதறியழ மைத்துன, மைத்துனிமார் மனம் பதற, பெறாமக்கள் பேதலிக்க, அயலவர் அழ, உறவினர் உருக உற்றாரும் மற்றாரும் பதற இவ்வுலக வாழ்வை நீக்கி இறைபதம் எய்தினார். உறு பிணியால் வருந்திய அன்னை உலக வாழ்வை துறந்தனள். காலன் யாரைத்தான் விட்டு வைத்தான். மண்ணில் பிறந்தவன் மாய்வது நியதி. மறப்போம் கவலையை........ அன்னையின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

## தேற்றம்

*கரந்த உயிர்தனை காலனவன்*
*இரந்தும் தரப் போவதில்லை இயற்கை நியதி இது*
*உணர்த்திருந்தும் உண்மையினை*
*உழல்வதேன்? தேறிடுவீர் அனைவருமே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்

24.02.2011 அன்றைய பொழுது மிகவும் சோர்வாக இருந்தது. மதிய நேரம் தொலைபேசி கூறிய செய்தி எம்மை உறைய வைத்தது. திருமதி கமலாதேவி மகாலிங்கம் அவர்கள் இறைபதம் அடைந்து விட்டார்கள். இதை எம்மால் ஜீரணிக்க முடியவில்லை. பழைய நினைவுகளை மனம் இரை மீட்டது. எங்கள் குடும்பத்துடன் அவர்கள் பழகிய காலங்கள் மிகவும் இனியவை. இனியவை மட்டுமல்ல அன்போடு இணைந்தவை. எங்கள் பிள்ளைகளை தம்பிள்ளைகள் போன்று அன்பு கூர்ந்தவர்கள். திருமதி. கமலாதேவி மகாலிங்கம் அவர்களின் நிறைந்த அன்பும் வந்தோரை உபசரிக்கும் பண்பும், இலட்சுமி கரமான முகமும், இல்லை எனாது ஈயும் கரங்களும் யாராலும் மறக்க முடியாதவை. எல்லாவற்றுக்கும் மேலாக அவரது விநாயக பக்தி மிகவும் வியக்கத்தக்கது.

அறுகம்புலம் விநாயகர் ஆலய தேர்த் திருவிழாவை முப்பது ஆண்டுகளுக்கு மேலாக திரு. மகாலிங்கம் தம்பதிகள் பக்திபூர்வமாக நடத்தி வருகின்றனர். உண்மையில் ஆலய உற்சவங்களில் தேரோடும் நிகழ்வானது அருள் மிகுந்த ஆராதனையாகும். அந்நாளில் பக்தி பூர்வமாக இருவரும் சங்கற்பிக்கும் காட்சி இன்றும் எம் கண்களில் தெரிகின்றது. அத்துடன் மேற்படி ஆலயத்தில் சண்டேஸ்வரப் பெருமானுக்கு ஆலயம் அமைத்தது அமரரின் சமய பக்தியின் ஆர்வத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாக என்றும் மிளிர்கின்றது.

அவரின் மறைவு உண்மையில் எங்கள் எல்லோருக்கும் ஓர் பேரிழப்பாகும். அவரின் நினைவும், அவருடைய மனப் பொலிவும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்வும் இனி வரும் இளம் தலைமுறைக்கு எடுத்துக் காட்டாகும். அறுகம் புலம் கோயில் மணி ஓசை வழமைபோல் நம் காதுகளை நிறைக்கிறது. கூடவே அன்னாரின் நினைவுகளும் தொடர்கிறது.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

***சி. துரைராசா***

(ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி. கமலாதேவி மகாலிங்கம் அவர்களின் நீங்காத நினைவலைகள்

"அரிது அரிது மானுடராகப் பிறத்தல் அரிது" அதனிலும் அரிது
"கண் துஞ்சார் மெய்வருத்தம் பாரார்
கடமையே கண்ணாயினார்" என்பதற்கிணங்க நித்திரை விலக்கி, உடல் உபாதைகளை மறந்து, தன்னலம் கருதாது பிணியகற்றும் மக்கள் சேவையாளனாக அவதரிப்பது.

பல விதமான கஷ்டங்கள் மத்தியிலும் தனது சுய முயற்சியால் முன்னேறித் தாதிய சேவையில் தன்னை இணைத்துக் கொண்ட அமரர் அவர்கள், அச் சேவையைத் தன் சிரம் மேல் ஏற்றுத் தன்னை முழுமையாக அச் சேவையில் ஈடுபடுத்தி, நோயாளர் மீது அன்பு, ஆதரவு காட்டி அவர்களின் உடல், உள உபாதைகள் நீங்க அர்ப்பணிப்போடு சேவை யாற்றும் காலத்தில், தனக்குச் சில ஔடதங்களுக்கு ஒவ்வாமை ஏற்படுகின்றதென்பதை அறிந்தும், போதிய தற்காப்பு வழிமுறை களுடன் தனது சீரிய பணியை முழுமையான அர்ப்பணிப்புடன் வழங்கிக் கொண்டிருந்தமையை, நான் அவருடன் சேவையாற்றிய காலத்தில் நன்கு அறிவேன்.

எனது பாடசாலை நண்பன் திருவாளர் மகாலிங்கம் அவர்களுடன் இல்லறத்தில் இணைந்து கொண்ட அமரர் அவர்கள், தனது இறுதி மூச்சுவரை கணவருடன் இணைந்து பொது விடயங்களில் அயராது உழைத்தார்.

ஒவ்வொரு மனிதரின் வாழ்விலும் தொடர்ந்து உயர்வது வயது, நிச்சயமானது மறைவு. இது வாழ்க்கையின் நியதி. இந்த உண்மையை யாராலும் மாற்றவோ, நிறுத்தவோ முடியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பதைப் புரிந்து கொண்டு, அமரர் அவர்களால் விட்டுச் செல்லப்பட்ட நற் பண்புகளையும், செயற்பாடுகளையும் நாம் தொடர்வதன் மூலம் அன்னாரின் ஆத்ம சாந்திக்கு உதவுவோமாக!. அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோமாக!

"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்"
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**டாக்டர் பொ. வே. தம்பித்துரை**
பதிவு வைத்திய உத்தியோகத்தர்.

## நினைவலைகள்

அமரர் கமலாதேவி மகாலிங்கம் எனது அயலவர், உறவினர் இவற்றைவிட இருவரும் அல்லாரை அறுகம்புலம் மகா கணபதியை குலதெய்வமாக வரிந்து கொண்டதில் ஒரு நெருக்கமும் உண்டு.

இக் கோயில் மகோற்சவம் ஆரம்பித்த காலத்தில் இருந்து மகாலிங்கம் கமலாதேவி குடும்பத்தினர் தேர்த் திருவிழா உபயகாரர்களாக இருக்கின்றனர். அமரர் இவ் ஆலய வளர்ச்சியில் காட்டிய அக்கறை அபரிமிதமானது. கடந்த 2005-ம் ஆண்டு ஆலயத்தை புனரமைப்பதற்காக பாலஸ்தாபனம் செய்யப் பெற்று பரிபாலன கோவில்கள் புதிதாக அமைப்பதாக தீர்மானிக்கப்பட்டது. அப்போது அமரர் மகாலிங்கம் கமலாதேவி அவர்கள் சண்டேஸ்வரர் கோவிலை தங்கள் உபயமாக அமைத்துத் தருவதாக முன்வந்தனர். சண்டேஸ்வரர் கோவில் மிகவும் முக்கியமானது. எல்லா பூஜா பலன்களை பெறும் இடம் அது. என நான் எடுத்துக் கூறிய போது எல்லாம் பிள்ளையாரின் அனுக்கிரகம் தான் என அமரர் புளகாங்கிதம் அடைந்தது இன்றும் எனது எனது நினைவில் பசுமையாகவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத் திருப்பணி வேலைகள் நாட்டின் போர்ச் சூழலால் தடைப்பட்ட போது பிள்ளையாருக்கு வருடக் கணக்காக அபிஷேகங்கள் உற்சவங்கள் நடைபெறவில்லையே என மிகவும் வேதனையடைந்தார்கள். அவரது வேதனை ஒரு தாய் சேயின் பால் காட்டிய அன்பின் பிணைப்பாக இருந்தது.

06.02.2009 இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது சண்டேஸ்வர மூர்த்திக்கு தனியாக மண்டபம் அமைத்து சிறப்புற பிரதிஸ்டா கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி பெரும் பேறு பெற்றார்.

இவர் நோயுற்றுப் படுக்கையில் இருந்தபோதும் நலம் விசாரிக்க வந்த அன்பர்களிடம் அறுகம் புலம் கோயிலைப்பற்றியே அதிகம் கதைப்பார். ஐங்கரனின் நினைவால் மனதை நிரப்பி நோயின் வேதனையில் இருந்து விடுபட்டார் போலும். அமரர் கடந்த 24.02.2011 அன்று இவ்வுலகை துறந்து துயரத்தைத் தந்தாலும் அவரது ஆத்மா ஐங்கரனின் பாதாரவிந்தங்களை அடைந்து விட்டது என்ற நினைவு ஆறுதலையும் அளித்தது. கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்தவர்க்கு மோட்சம் கிட்டும் என்பது ஐதீகம். கமலாதேவியின் பிரிவால் துயருற்றிருக்கும் கணவர் மற்றும் உறவுகளின் துயர்களை அகற்றிட எல்லாம் வல்ல மகாகணபதியின் தாள்களை பிரார்த்திப்போம்.

"ஒரு பொல்லாப்பும் இல்லை"
"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது"

**வே. சடாச்சரமூர்த்தி**
ஓய்வு பெற்ற மின்அத்தியட்ஷகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் அமரர்

திருமதி மகாலிங்கம், யான் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் கடமை செய்யும் காலத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி மாற்றலாகி வந்து சேவை செய்தார். அவர் வரும்பொழுது எம்மூரைச் சேர்ந்த நவமணி, மனோன்மணி அகியோரும் அவருடன் கடமை புரிந்தனர். அவர் களோடு எம் ஊரவர் என்ற ரீதியில் வைத்தியசாலை செயற் பாட்டிற்கு உரம் சேர்த்தார். ஊரடங்கு, குண்டு வீச்சு போன்ற இக்கட்டான நேரங்களிலும் உள் ஒழுங்கைகள் கள்ளப்பாதை யூடாக வைத்திய சாலைக்கு வந்து கடமை செய்தார். மக்கள் பாதிப்படையாமல் வைத்தியசாலையை மூடாமல் நடாத்த உறு துணையாக இருந்தவர். சில சமயம் இவரின் கடமை முடிந்து இவரைக் கூட்டிச் செல்ல திரு. மகாலிங்கம் வந்திருப்பார். யுத்த சூழ்நிலையில் கடமைக்கு வரவேண்டியவர் காலதாமதமாகினால் அவர்கள் வருமட்டும் கணவனைக் காக்க வைத்திருப்பார்.

நோயாளிகளுடன் அன்பாக பேசி ஆதரவாக நடப்பார். அவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் போது நான் வேறு இடத்திற்குச் சென்று விட்டேன். அவர் ஓய்வு பெறும் வரை எந்த நோயாளி மீதோ, கரைச்சல், தொந்தரவு கொடுப்பவர்களாக இருந்தாலும் அவர் கோபித்து எரிந்து விழுந்தது கிடையாது. அவர் கடமையில் கண்ணியமானவர். தாதிய உத்தியோகத்தர்க்கு ஒரு உதாரணமாகத் திகழ்ந்தவர்.

அவர் மக்கள் மனதில் ஆழமாக வேரூன்றி மக்களால் நேசிக்கப்பட்டார் என்பதற்கு அவரின் இறுதியாத்திரையில் கலந்து கொண்ட ஆயிரக் கணக்கான மக்களே சாட்சி. அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எம் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**லயன் டாக்டர் S.S. அருளானந்தம்**
மாவட்ட இணைப்பாளர் 306 B1 சலரோகம்
சர்வதேச லயன்ஸ் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

பிறப்பதும் இறப்பதும் உலக நியதியாகும். பிறப்பின் நோக்கத்திற்கமைய வாழ்வது தான் பெருமையாகும். அன்பும் அறமும் கொண்டு பண்பும் பயனும் பெற இல்லற வாழ்வில் நடந்து கொண்டவர். அமரர் மகாலிங்கம் கமலாதேவியாகும்.

அவர் வைத்திய சாலைகளில் தாதியராகக் கடமையாற்றி நோயாளிகளைப் பராமரித்து நற்பணி பலகாலம் ஆற்றியவர். அவரது சேவையால் பலரது நன்மதிப்பைப் பெற்றவர். தான தர்மங்களில் நம்பிக்கை கொண்டு அவற்றைக் கணவருடன் சேர்ந்து செய்து வந்துள்ளார். இவரது கணவர் திரு. நா.மகாலிங்கம் அவர்கள் அல்லாரை அறுகம்புலம் விநாயகப் பெருமான் ஆலயத்தில் பலகாலம் நிர்வாகியாக பணிபுரிந்து தெய்வத் தொண்டு ஆற்றி வந்துள்ளார். இவரது பணி சிறப்புற உதவி ஒத்தாசையாக விளங்கியவர் இவர். கோவில் திருப்பணிக்கு இயன்றளவு வழங்குவதற்கு ஒரு போதும் இவர் பின்னிற்பதில்லை. அனைவரையும் அன்போடு அனுசரித்து உணவு கொடுத்து ஆதரிப்பவர். கணவனின் கருத்தறிந்து இயைந்து நடப்பவர்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தார் ஓம்பல் தலை"

என்ற திருக்குறளில் வகுக்கப்பட்டுள்ள வாழ்க்கை முறையினை அவரிடம் காணக்கூடியதாக இருந்தது.

அவரின் மறைவால் துன்புறும் கணவர் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். அவரது ஆத்மா சாந்தி அடைய, இறைவன் திருவடி நீழலில் நித்தியமாக அமைதி பெற இறை அருளை வேண்டுகின்றேன்.

**வே. நாகராசா** J.P
ஓய்வு பெற்ற உபஅதிபர்
மீசாலை வடக்கு,
மீசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் உள்ளத்தில் நிறைந்தவர்

திருமதி கமலா மகாலிங்கம் அவர்கள் எனது உறவினர் மட்டுமன்றி அபிமான மாணவியாகவும் திகழ்ந்தவர். இவர் வீட்டிற்கு மூத்த பிள்ளையாகவும் பொறுப்புள்ளவராகவும் திகழ்ந்தவர். எல்லோர் மனங்களையும் புரிந்து செயற்படுவர். இவர் கல்வி கற்ற காலத்தில் ஆசிரியர்களது அன்பும் ஆசியும் இவருக்கு கிடைத்தது.

இவர் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியெய்தியவுடன் பிரவேச பண்டிதர் வகுப்பில் சேர்ந்து அதிலும் சித்தியெய்தினார். இவர் சேவை மனப்பாங்குடையவர். இவரின் விருப்பப்படி இவருக்குத் தாதி உத்தியோகத்தர் பதவி கிடைத்தது. இவர் பல வைத்தியசாலையில் தனது பணியைச் சிறப்பாக ஆற்றி வந்தார். இவர் வைத்தியசாலையிலும் சரி வீட்டிலும் சரி நோயாளர் களோடு சீறாமல், சினக்காமல் இன்முகத்தோடு பழகுவார். யார் உதவி கேட்டாலும் மனமுவந்து செய்து கொடுப்பார்.

எனது குடும்பத்தாருடன் மிக நெருக்கமாகப் பழகி வந்தார். பல தடவைகள் தாமாக முன்வந்து உதவி ஒத்தாசைகள் நல்கியதை எம்மால் மறக்க முடியாது. இளமையிலிருந்தே சைவ சமயப்பற்றும் ஒழுக்கமும் நிறைந்தவராக விளங்கியவர். எந்நேரமும் நெற்றியில் சந்தன, குங்குமப் பொட்டுக்கள் பளிச்சிடும். கணவனார் திரு. மகாலிங்கமும் இவருமாக இணைபிரியாது சைவ ஆலயங்களுக்குச் சென்று தரிசனம் செய்வதனை யாரும் மறக்க மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்குச் சில மருந்துகள் ஒவ்வாமையாக இருந்தது. இதன் காரணமாக ஓய்வு பெற்றுக் கொண்டார். ஆயினும் ஊரவர்கள், உறவினர்களுக்கான தன் பணியைக் குறைவின்றிச் செய்து வந்தார்.

இவர்களது குல தெய்வமான அல்லாரை அறுகம்புல விநாயகர் மேல் அபார பக்தி கொண்டவர்கள். ஆண்டு தோறும் அவ்விநாயகருக்கு தேர்த் திருவிழாவை நல்ல முறையில் நிறை வேற்றி வந்தார்கள்.

மேலும் அங்கே அமைக்கப்பட்ட சண்டேஸ்வர மூர்த்திக் குரிய கட்டிடத் திருப்பணியையும் தாமே பொறுப்பேற்று அக் கைங்கரியத்தையும் செவ்வனே நிறைவேற்றி முடித்தனர்.

மனிதப் பிறவியில் யாரும் இறவா வரம் பெற்று விட முடியாது. அவ்வகையில் நற்தொண்டுகள் செய்த இவர் சில காலம் நோய்ப்பிணிக்கு ஆளாகி இருந்து இறையடி சேர்ந்துள்ளார். அன்பு நேயம் மிக்க திருமதி கமலா மகாலிங்கம் அவர்கள் ஆத்மா சாந்தியடைய அவரது குலதெய்வமான அறுகம் புல விநாயகன் அருள் ஆசி வேண்டி விடை பெறுகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**திரு. திருமதி. மார்க்கண்டு**
ஆசிரிய குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் என்றும் கமலா . . .

எனக்கு நல்ல நினைவிருக்கிறது. நான் இரண்டாவது தடவையாகவும் நீ முதலாவது தடவையாகவும் கீரிமலை கடலைப் பார்த்தது. அப்போதெல்லாம் கடல் அலைகள் நம்மை அச்சமூட்டவில்லை. 24.02.2011 அன்று கடல் அலைகள் சீறிக் கொண்டது போலவும் கடற்கரையில் நூற்றுக் கணக்கான மக்களிடையே உன்னைத் தேடிப் பிடித்தது போன்ற உணர்வு என்னை உறுத்திக் கொண்டு இருந்தது.

நாங்கள் இருவரும் தாதியர் பயிற்சிக்கு ஒரே நாளில் இணைந்து கொண்டோம். கல்லூரிகளில் நான் கலந்த போட்டி களில் எல்லாம் அவளும் கலந்து கொண்டாள். அப்படிச் செயற்பட்டது எல்லாம் எனக்கு ஊக்கத்தை அளிப்பதற்கே என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

எடுத்ததற்கெல்லாம் அகப்பை காம்பை தூக்கும் என் அம்மாவிடம் எனது திருகுதாளங்களை காட்டிக் கொடுத்து நல்வழிப்படுத்தினாள். என் அம்மாவுக்கு அவளும் ஓர் பிள்ளை யாய் அம்மாவை நேசித்த மகளாகவும் கூட இருந்தாள். அன்று தொடக்கம் அவளை நான் வெறுத்ததில்லை. வெறுக்கவும் முடியாது.

தம்பு என்று என்னை செல்லமாக அழைத்தபடி என் நிழல் போல் தொடர்ந்து ஒரே சமயத்தில் தாயாய், சகோதரியாய், தோழியாய் கூடவே வந்தாள்.

எப்போதும் என்கூடவே வாழ்ந்து என் திருமணத்தை முன்நின்று நடாத்தி..... அவள் திருமணத்தை நான் நின்று நடாத்தி...... இன்று கொள்ளிக் குடத்தை மகாலிங்கம் அண்ணன் கையில் கொடுக்க வைத்தவளாகி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1976-ம் ஆண்டு நாங்கள் இருவரும் திருக்கேதீஸ்வரம் சிவராத்திரியில் பாலாவியில் நீராடி குடம் எடுத்து நடுச் சாமத்தில் சிவலிங்கத்திற்கு ஊற்றிய போது மணி ஒலிக்க நீ பேரானந்தப் பட்டதை நினைக்கின்றேன்.

1977-ம் ஆண்டு ஆடிக் கதிர்காம தலயாத்திரை சென்று முழுகி விட்டு நாங்கள் இருவரும் மலைக்கு செல்லும்போது பாதை தவறிச் சென்று நீ முருகா முருகா என்று கூப்பிடும் போது ஒரு வயோதிபர் கூட்டிச் சென்று மலையை அண்மித்ததும் அந்த வயோதிபர் திடீரென மறைந்தபோது நீ அதிசயித்து நின்ற காட்சி என் ஞாபகத்திற்கு வருகிறது.

நீ கடமை செய்த அதே யாழ்ப்பாண வைத்தியசாலையில் நோயுடன் போராடி பலியாகிய போது அதை அறியாத கையாலாகாத சுயநலவாதியாக கிளிநொச்சியில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என்னால் அவள் திறமைகளை சேவைகளை குணாதிசயங்களை முழுமையாக ஒரு படைப்பை நினைவுக் குறிப்பை எப்போதும் எழுதிவிட முடியாது. என்னால் முடிவதெல்லாம் யார் யாருடையதோ அவர்களிடம் சேர்ந்து விட்டாள் என்பதே.

நீ கண் மூடித் தூங்கும் பேரழகை பார்த்திருக்கின்றேன். இன்று மண்மூடிக் கொண்டு உன்னை பார்க்க தடுப்பதென்ன கொடுமை? அவளை இறந்தோர் பட்டியலில் சேர்த்து என்னால் கற்பனை பண்ணவே முடியாது. கமலா நீ பூவோடும் பொட்டோடும் அரன் அடி சேர்ந்து விட்டாய்.

"எப்போதோ முடிந்த காரியம். ஒரு பொல்லாப்பும் இல்லை" யோகர் சுவாமிகள் சொன்னது. பிறப்பு என்று ஒன்று இருந்தால் இறப்பு நிச்சியம்" உன் ஆத்மா சாந்தியடைய அறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு நண்பி தம்பு**
**தாதிய உத்தியோகத்தர் - கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தங்கை ராதாவின் இதயக்குமுறல்

தினமும் காலை கண்விழித்தவுடன் ராதா ராதா என்று கூப்பிடுவீர்களே அக்கா!. இப்போதும் கூப்பிடுவது போல் உங்கள் குரல் என் காதில் ஒலித்த வண்ணம் உள்ளது அக்கா!
அக்காவாக மட்டுமல்லாமல் அம்மாவாகவே இருந்து
எனக்கு வழிகாட்டினீர்களே அக்கா!
எங்கு சென்றாலும் உங்களிடம் சொல்லித்தானே
செல்வேன் அக்கா!

இனி யாரிடம் சொல்லிப் போகப்போகிறேன் அக்கா
கடைசி மூச்சு இருக்கும்போதும் ராதா என்று
கூப்பிட்டு கட்டித் தழுவினீர்களே அக்கா!
கடைசியாக என் கையாலே (23-02-2011)
புதன்கிழமையன்று வைத்தியசாலையில்
வைத்து கடைசிச் சாப்பாடும்
கடைசித் தண்ணீரும் என் கையாலே குடித்தீர்களே அக்கா!
எங்களை இங்கே விட்டு விட்டு நீங்கள் மட்டும்
எங்கேயக்கா தனியாகச் சென்றீர்கள்
என்ன உதவியென்றாலும் கேட்காமல் செய்வீர்களே அக்கா!
இனி யாரை என் பிள்ளைகள் ஆசையம்மா என கூப்பிடப் போகிறார்கள் அக்கா!
6 ஆண்டுகளாகியும் எங்கள் அப்பாவின் துயரம் மாறமுன்
நீங்களும் பெரியதொரு இழப்பைத் தந்து விட்டு
எங்கு அக்கா சென்றீர்கள்? . . .
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவின் துயரத்தில்
**தங்கை ராதா**
**மகன் மிதுனன், றஜீவன்**
**மகள் மாதங்கி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் இருந்து தங்கை ராணி இரங்கல்

அன்பான அக்காக் குட்டியே நீங்கள் எங்கள் பன்னிரண்டு பேரில் முதல் வந்து உதித்த முத்தான அக்காவே! அக்காக் குட்டி நீங்கள் முதல் வந்து உதிர்த்தது போல முதலாவதாகவே எங்கள் எல்லோரையும் விட்டு விட்டு போய்விட்டீர் அக்கா! அக்கா நான் பயணம் வரும்போது உங்கள் வீட்டுக்கு கடைசியாகத்தான் வந்தேன். நான் வரும்போது நீங்கள் சாப்பிட்டுக்கொண்டு இருந்தீர்கள்.

நான் அந்தச் சாப்பாட்டை வாங்கி உங்களுக்கு ஊட்டி விட்டேன். கடைசிச் சாப்பாடு ஊட்டுகிறாயா? என சொல்லச் சொல்ல இரு கண்களாலும் கணீர்மல்க அழுதீர்கள். அதை உண்மையாக்கிவிட்டீர்களே அக்கா! உங்கள் கண்ணீரைத் துடைத்து துடைத்து அவ்வளவு உணவையும் ஊட்டித்தான் அக்கா வந்தேன். அந்தக் காட்சியை என்னால் மறக்க முடியவில்லை அக்கா! அக்கா உங்களுக்கு நாங்கள் ஒரு சின்னப் பரிசுப்பொருள் தந்தால் நீங்கள் அதை ராணி தந்தவள் என்று நூறு பேருக்கு காட்டிக் காட்டி சொல்லுவீர்கள் அப்படியான அன்பான மதிப்புக்குரிய எங்கள் அக்கா.

அக்கா மூத்தவளாக நீங்கள் இருந்து இளையவர்களாகிய எங்கள் பதினொரு பேரையும் படிப்பித்து நல்ல வழிகாட்டினீர்கள் அக்கா! நீங்கள் எங்களுக்கு மட்டுமல்ல தாதியாக இருந்து பல மக்களுக்கு தொண்டு செய்துள்ளீர்கள். அக்கா உங்கள் செய்திகேட்டு நாங்கள் பதைபதைத்து போனோம். நீங்கள் இறந்ததை எங்களால் நம்பமுடியவில்லை அக்கா! அக்கா நீங்கள் உங்கள் பெறா மகள் லதியிடம் அன்று கனவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனீர்களாம். சோறும் பருப்புக்கறியும் கேட்டீர்களாம். கொடுக்க முன்னர் ஆசை அம்மா எங்களை விட்டுப் போய்விட்டா என்று அழுதாள். அக்கா நீங்கள் கடைசிவரை சத்திரசிகிச்சையின் பின் அன்புச் சகோதரி ராசு அக்காவிடம் சாப்பாடு வாங்கி சாப்பிட்டு பால்குடித்து கதைசொல்லி கதை சொல்லி காற்றாகப் போய்விட்டீர்களே. அது எங்கள் எல்லோருக்கும் சந்தோசத்தைக் கொடுத்துள்ளீர்கள் அக்கா! அன்புச் சகோதரிகள் ராதா, நந்தாவை கட்டிப்பிடித்து இறுதி முத்தம் கொடுத்து அவர்கள் கடைசிவரை நீங்கள் பட்ட வேதனைகள் நேரில் பாத்து பதைபதைத்து போனார்களாம் அக்கா. அக்கா நீங்கள் பல வர்ண றோஜாக்கள், பல வர்ணச் செவ்வரத்தைகளை உண்டாக்கி ஒவ்வொரு பூவும் பூக்க சந்தோசப்படுத்துவீர்கள். இனி உங்கள் பூக்களை யார் பார்ப்பது. நீங்கள் வளர்த்த வர்ணப் பூக்கன்றுகள் உங்களைத் தேடி கண்ணீர் விடுகின்றன. அக்கா நாங்கள் எல்லோரும் எங்கள் மூத்த அக்காவை இழந்து விட்டோம். கமலாக்கா என்று அழைக்க எங்கள் அக்காக் குட்டி இல்லையே. அக்கா உங்கள் புகழ் வாழவும் அக்காவின் ஆத்மா சாந்தி யடையவும் அக்காவின் அறுகம் புலப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

அக்காவின் பிரிவால் வாடும்

**தங்கை ராணி**

**மச்சான் சபா**

**மகள் லதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரி பவளத்தின் உள்ளக்குமுறல்

பவளம் பவளம் என்று என்னை அன்போடு அழைப்பீர்களே
மூத்த சகோதரியாய் அவனியிலே நீ பிறந்து
அன்பான வார்த்தைகளால் என்னை அரவணைத்தீர்களே!
சகோதரியல்லாது என்னை பிள்ளைபோல் நினைத்தீர்களே!
உடன்பிறப்பாய் வந்தென்னை உயர்வுசெய்த உத்தமியே
பாசத்துடன் பழகுவதற்கு பாரினிலே உங்களைவிட
யாரையுமே நான் கண்டதில்லை
தெய்வமே! என் அன்புத் தொல்லை பொறுக்காமலா
அவரை நீ பறித்துக் கொண்டாய் . . .
உங்களின் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்

ஆறாத் துயரில் புலம்பும்
**சகோதரி பவளம்**
(டென்மார்க்)

## உங்கள் 10-வது செல்ல மகள் மதியின் மனக்குமுறல்

நீங்கள் எங்களுக்கு அக்கா அல்ல. எங்கள் தாய். அன்றிலிருந்து இன்றுவரை எங்களுக்கு ஒரு சிறு தலையிடி என்றாலும் உங்கள் மடியில் தான். ஓடிவந்து விழுவோமக்கா. ஆறுதல் சொல்லவும், அரவணைப்பதும், புத்தி புகட்டுவதுமாக, செல்லமாக, அன்பான வார்த்தைகளால் எங்களை கொள்ளை கொள்வீர்களே அக்கா. எங்கள் பள்ளிப்பருவத்தில் எமக்கு ஊக்கம் கொடுத்து, எங்களுக்குத் தேவையானவற்றை நாம் கேட்கும் போதெல்லாம் சினம் கொள்ளாது, மறுப்பேதும் சொல்லாது ஆசையாக வாங்கித் தந்து எங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்விப்பீரகளே அக்கா. நீங்கள் ஊர்காவற்றுறையில் வேலை செய்து கொண்டிருக்கும் வேளையில் நான் 8-ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது, நீங்கள் மாதம் ஒரு தடவை எங்களிடம் வந்து போவீர்கள். அந்நாட்களில் எமக்கு தேவையென கடிதத்தில் எழுதும் பொருட்களை மறக்காது வாங்கித்தந்து மகிழ்விப்பீரகளே அக்கா! அவை யாவும் என் மனதில் அப்படியே பதிந்திருக்கின்றது. ஒருமுறை எனக்காக கொம்பாஸ் பெட்டி வாங்கி வந்தபோது, எனக்கு பரீட்சை முடிந்து றிப்போட் தந்திருந்த வேளை, றிப்போட்டைப் பார்த்து அக்கா அடிக்கப் போகிறா என நான் வீட்டுப் பின்புறத்தில் போய் ஒளித்து இருந்தேன். நீங்கள் என்னைத் தேடிவந்து அன்பாக ஆறுதல் வார்த்தை கூறி சமாதானப்படுத்தி கூட்டிச்சென்றது இப்பவும் என் கண்களில் காட்சியளிக்கிறதே அக்கா!

2004 இல் நாங்கள் உங்களிடம் வந்திருந்தபோது நான் உங்களிடம் தனிமையாக இருந்து பல விடயங்கள் மனம்விட்டு பேசியபோது, நீங்கள் தாயாக இருந்து எனக்கு புத்திமதி கூறி ஆறுதல்படுத்தினீர்கள். எல்லாம் மனதில் படமாக ஓடிக்கொண் டிருக்கின்றது. நிதுசன், நிசாங்கி இருவருடனும் எவ்வளவு அன்பாகப் பழகினீர்கள். அங்கு மீசாலையில் நாம் நின்ற நாட்களில் ஒவ்வொரு விடியலிலும் எங்களைக் கூப்பிட்டு எழுப்பி விதம்விதமான சாப்பாடுகள், பழங்கள் என்று எம்மை அன்பாக உபசரித்ததை மறக்க முடியாதக்கா. உங்கள் வீட்டு மரம், செடி, கொடி யாவற்றுக்கும் தாயாக இருந்தீர்களே!! உங்கள் பூங்கன்றுகளுடன் தினமும் கதைப்பீர்களேயக்கா. பூங்கன்றுகளின் தளிர், இலை, மொட்டு, பூ என்று ஒவ்வொரு மலர்வையும் பார்த்து இரசிப்பீரகளே! எங்களைக் கூட்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று ஒவ்வொரு பூமரத்தின் கதையையும் சொல்லி மகிழ்வீரகளே அக்கா. இப்போ அவை எல்லாம் அநாதையாகி விட்டதேயக்கா.

உங்கள் துக்க செய்திகேட்டு எமக்கு ஒருகணம் இதயவோட்டமே நின்றுவிட்டது போலாயிற்று. நிது, நிசாங்கி ஆசையம்மாவுக்கு நடந்தது உண்மையா என்று கேட்டு கொஞ்ச நேரம் ஏக்கத்துடன் அப்படியே அசைவின்றி நின்றார்கள். அக்கா! உங்கள் கடைசி மூச்சு வரை ஒவ்வொரு விடயங்களையும் சொல்லிச் சொல்லி போனது எங்கள் மனதைக் கொஞ்சம் ஆற்றுகிறது. அறுவைச் சிகிச்சைக்குப் பின்னரும் சாப்பிட்டு, தண்ணீர அருந்தி கதைத்து எங்களைவிட்டுப் பிரிந்த சோகத்தைக் கேட்டு ஆறுதல்படு என்று சொல்லுகிறார்கள். எப்படி நாம் ஆறிக்கொள்வது. கடைசி நேரத்தில் அத்தான் இனி என்ன செய்யப்போகிறார் என்று கேட்டீர்களே, அத்தான் உங்களுக்குக் கிடைத்த பெரும் கொடை அக்கா. உங்களை எவ்வளவு அன்பாக வைத்துப் பார்த்தார் என்று எங்கள் யாவருக்கும் தெரியும். அவரை நாங்கள் கைவிடமாட்டோமக்கா. அக்கா! உங்கள் குரலை இனி எப்படி கேட்பது? உங்கள் அன்பு முகத்தை நாம் இனி எங்கு காண்பது? உங்கள் அன்பு, அரவணைப்பு, ஆறுதல் வார்த்தைகளை இனி யாரிடம் கேட்பது? எங்களால் கேள்வி மட்டும்தான் கேட்க முடியும். பதில் கிடைக்கப்போவதில்லை. உங்கள் பிரிவைத் தாங்க முடிய வில்லை. ஆற்ற முடியவில்லையக்கா.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**சகோதரி நளாயினி (மதி)**

**டென்மார்க்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கை பிரபாகரன் மாலாவின் உள்ளக்குமுறல்

அக்கா உங்கள் பிரிவை அறிந்ததில்
இருந்து எமக்கு உறக்கமில்லை
பசி இல்லை உன் பிரிவால் நாம் வாடுகின்றோம்
நாங்கள் உங்குவரும் போதெல்லாம் சிரித்த
முகத்துடன் கட்டி அணைத்து
வரவேற்று எப்படி எல்லாம் உபசரிப்பீர்கள்
விருந்தோம்பலுக்கு உதாரணம் அக்கா நீங்கள் தானே
அதை எல்லாம் எப்படி மறப்போம்? . . .
அக்கா நாங்கள் உங்களைப் பார்த்து ஏழு மாதங்கள் தானே!
உன் பிரிவை எங்களால் தாங்கமுடியவில்லை

அம்மாவின் பிறந்த நாளை செய்துமுடித்துவிட்டு
அக்கா நான் உங்களுக்கு என்ன சொன்னேன்?
அடுத்த முறை வரும்போது உங்கள்
பிறந்தநாளைக் கொண்டாடுவோம் என்றேன்
சிரித்த முகத்துடன் சொன்னதே சந்தோசம் என்றீர்கள்
அக்கா நீங்கள் அப்படிச் சொன்னதற்கு
காரணம் இப்பதான் புரிகின்றது.

உன் அன்பை மறக்காமல் தேடுகின்றோம் நாம் உன்னை
மூத்த சகோதரியே! மறப்போமா நெஞ்சில்
ஓடுதக்கா உன்நினைப்பு
உனது ஆத்மா சாந்தி அடைய - நாம்
எல்லாம் வல்ல ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.


**தங்கை பிரபாகரன் மாலா**
**அனிஷா மிலன்**
**(டென்மார்க்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவு என்னும் நூலகத்தில்
நாம் என்னும் புத்தகத்தில்
இன்னும் உங்கள் நினைவுகளை
படித்துக் கொண்டிருக்கின்றேன்
அப்போது தான் தெரிந்தது
அவைகள் நினைவுகள் அல்ல
நம் சரித்திரம் என்று.

அனிஷா பிரபாகரன்
(டென்மார்க்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org